| | | |
|---|---|---|
| **அ.வ.எண்** | **:** | **211/2016** |
| **தேதி** | **:** | **11.09.2024** |
| **பெயர்** | **:** | ரமேஷ் |

**பி.த.சா.1. /(DW1)** திரு. ரமேஷ் என்பவருக்கு இந்நீதிமன்றத்தால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**<u>பி.த.சா.1 (DW1) - குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1) வாதிக்கு புல எண். 1/8 , உட்பிரிவு தெரியவில்லை. மேற்படி புல எண்ணில் 6 செண்ட் நிலம் உள்ளது. அந்த நிலத்திற்குள் செல்ல வழி வேண்டும் என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தின் ஜக்பந்தியில் வடக்கிலும், தெற்கிலும் மெய்க்கால் புறம்போக்கு, கிழக்கிலும் மேற்கிலும் எங்களது நிலம் உள்ளது. வாதி நிலத்திற்கு கிழக்கிலும், மேற்கிலும் இருக்கும் என்னுடைய நிலத்திற்கு எவ்வாறு வழி அமைத்து செல்கிறேன் என்றால் தெற்கு பகுதியில் உள்ள எனக்கு சொந்தமாக கிராம நத்தம் நிலத்தின் வாயிலாக செல்கிறேன்.

2) வாதி நிலத்தின் தெற்கு பக்கத்தில் மெய்க்கால் புறம்போக்கு ஆகும். அதற்கு பக்கத்தில் உள்ள என்னுடைய நிலம் மட்டும் கிராம நத்தம் என்றால் வாதி நிலத்தின் தெற்கு பக்கத்தில் மெய்க்கால் புறம்போக்கு நிலம் உள்ளது. ஆனால் எனது நிலத்தின் தெற்கு பக்கத்தில் எனக்கு சொந்தமாக கிராம நிலம் தான் உள்ளது. அதற்கு பட்டா எண். 513, 514 என்னிடம் உள்ளது. மேற்படி என்னுடைய கிராம நத்தம் நிலத்திற்கான புல எண். 1/25A7 ஆகும். மேற்படி புல எண் தவறு என்றால் சரியல்ல.

3) நான் தாக்கல் செய்துள்ள பிதசாஆ 5 FMB வரைபடத்தில் புல எண் தவறாக குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அது சரியாக வருவாய் அதிகாரிகள் மூலம் பெறப்பட்டுள்ளது. பிதசாஆ 5 வரைபடம் செங்கல்பட்டு, சைதாப்பேட்டை சம்பந்தப்பட்ட வரைபடம் என்றால் சரியல்ல. வாதசாஆ 6 மற்றும் வாதசாஆ 9 ஆவணங்கள் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்டுள்ளது. மேற்படி வாதி தரப்பு ஆவணங்கள் தான் சரியான ஆவணங்கள் . பிதசாஆ 5 தவறானது என்றால் சரியல்ல.

4) வழக்கறிஞர் ஆணையர் அறிக்கையில் வடக்கில் ஓடையும், தெற்கில்

மெய்க்கால் புறம்போக்கும் உள்ளதாகவும், அதன் புல எண் 1/1A1A என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் வழக்கறிஞர் ஆணையர் சரியாக தாவா சொத்தை அளக்கவில்லை. வழக்கறிஞர் ஆணையர் அறிக்கையில் தெற்கு பகுதியில் உள்ள நிலத்திற்கு எந்த ஆவணமும் சர்வேயர் வழங்கவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

5) சர்வேயர் அளந்து சென்ற பின்னர் வாதி அளந்து நடப்பட்ட கல்லை பிரதிவாதி பிடுங்கியதாக குன்றத்தூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றால் இல்லை. வாதசாஆ 20 ல் வாதி என் மீது கொடுத்த புகார் ஏற்பு மனு ரசீது என்றால் அவர் தவறாக புகார் கொடுத்துள்ளார். வாதசாஆ 18 ன் படி வாதி என் மீது காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றால் அது பொய்யான புகார் ஆகும். வாதசாஆ19 வாதி என் மீது காவல் நிலையத்தில் அளித்த புகார் என்றால் வாதி தவறான புகாரை என் மீது அளித்துள்ளார்.

6) பிதசாஆ 20 ன் படி நான் வாதி , வாதி வழக்கறிஞர் சர்வேயர் மற்றும் பலருக்கு அனுப்பிய கடிதம் அதன் AD card நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அஞ்சலக ரசீதை தாக்கல் செய்துள்ளேன். AD card தாக்கல் செய்யவில்லை. என்னிடம் காட்டப்படும் வாதசாஆ 6 வரைபடத்தில் புல எண். 1/1A1A க்கு தெற்கு பகுதியில் நான் வணிகவளாகம் கட்டி அனுபவித்து வருகிறேன் என்றால் என்னுடைய கிராம நத்தம் பட்டா நிலத்தில் தான் நான் வணிகவளாகம் கட்டி அனுபவித்து வருகிறேன்.

7) புல எண். 1/1A1A வில் வாதிக்கும் வழிப்பாதையாக பயன்படுத்த உரிமை உள்ளது என்றால் புல எண். 1/1A1A வில் வழிப்பாதை இல்லை. வாதிக்கும் எனக்கும் எந்தவிதமான சொத்து பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். புல எண். 1/1A1A வீல் வழிப்பாதை குறித்து தான் எனக்கும் வாதிக்கும் பிரச்சனை என்றால் மேற் படிபுல எண். 1/1A1A ல் வழிப்பாதையே இல்லை. வாதி கூறியபடி உறுத்து கட்டளை மற்றும் விலம்புகை பரிகாரம் பெறுவதற்கு தகுதி உள்ளவர் என்றால் நான் பொய்யான சங்கதிகள் கூறி இவ்வழக்கை திசை திருப்ப பார்க்கிறேன் என்றால் சரியல்ல.

8) நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் 1984 ம் ஆண்டு முதல் 35 வருடங்களாக புல எண். 1/8 ல் உள்ள சொத்தை அனுபவதித்து வருவதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் 2013 ம் வருடத்தில் தான் நான் கிரயம் பெற்று அனுபவித்து வருகிறேன். புல எண். 1/1A3 ல் பிளேன் அப்புருவல் பெற்று இவ்வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் தவறு. என்னிடம் காட்டப்படும் வாதசாஆ 6 ல் புல எண். 1/8 மற்றும் புல எண். 1/1A3 வெவ்வேறு இடத்தில் அமைந்துள்ளது

என்றால் சரியல்ல. புல எண். 1/1A1A என்பது மெய்க்கால் புறம்போக்கு நிலம் அதை மறைத்து வாதிக்கு வழி விடாமல் கட்டிடம் கட்டி அனுபவித்து வருகிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய நிலத்தில் தான் கட்டிடம் கட்டியுள்ளேன்.

Typewritten by the Typist Open Court to my dictation and to my hearing read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

District Munsif,
Sriperumbudur.